## லங்கா சதொச லிமிடட் கம்பனி – 2017

லங்கா சதொச லிமிடட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.1 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“பணிப்பாளர் சபை”) பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் நிலைத்திரு தன்மை

கம்பனியினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரித்துக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 949,040,152 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 10,195,466,639 |
| மொத்தச் சொத்துக்கள் | 11,144,506,791 |
| உரிமை மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | (3,033,662,184) |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 248,673,144 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 13,929,495,831 |
| மொத்த உரிமை மற்றும் பொறுப்புக்கள் | 11,144,506,791 |

| | |
|---|---|
| மொத்த வருமானம் | 28,277,487,951 |
| மொத்தச் செலவினம் | (30,222,740,973) |
| | --------------------- |
| நட்டம் | (1,945,253,022) |
| | ========== |

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பு சேதங்கள் உட்பட இருப்பு தொடர்பாக நட்டங்கள் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் உரிமை மூலதனம் மறைபெறுமதியாக மாறியிருந்ததுடன் உரிமை மூலதனத்தில் காணப்படும் பாதகமான நிலைமையால் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் காணப்பட்டமையால் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு உரித்தற்ற 19 உத்தியோகத்தர்களுக்கு தொடர்புடைய சுற்றறிக்கைக்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் போக்குவரத்து படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போக்குவரத்து படிகளாக ரூபா 1,672,500 ஆக இருந்தது. |
| (ஆ) 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | அரசிற்கு சொந்தமான கம்பனிகளில் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்காக சேவைக்காலத்தின் அடிப்படையில் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்தப்படக்கூடிய தொழில்துறைப் படிகள், அளவினை விஞ்சி 09 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரை ரூபா 412,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது |

## 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 பிரிவின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்காக மாதாந்தம் ரூபா 100,000 பிரதி பொது முகாமையாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 75,000 வீதம் 06 உத்தியோகத்தர்களுக்கு செயலாற்றல் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த படிகள் ரூபா 5.615,000 தொகை ஆக இருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 பிரிவின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் தொழில் தகைமைகளை சமர்ப்பித்த உத்தியோகத்தர்களுக்காக மாதாந்த ரூபா 10,000 மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்காக மாதாந்தம் ரூபா 100,000 வீதம் தொழில்துறை படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு மீளாய்வாண்டின் போது 09 உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த படிகள் ரூபா 964,333ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3. செயலாற்றல்

### 3.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பிரிவின் பிரகாரம் கம்பனியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியினை நிறைவேற்றுவதற்காக மூன்றாண்டிற்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று மற்றம் அதனுடன் இணைந்ததாக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைக்கப்பட்ட திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்திற்கும் செயல்நடவடிக்கை திட்டத்திற்கும் இணங்கும் வகையில் வருடாந்த பாதீடொன்று மீளாய்வாண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது திறைசேரியால் கம்பனியால் புதிய விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல், விற்பனை நிலையங்களைப் புதுப்பித்தல், பாதுகாப்பு கமெரா முறைமையொன்றை செயற்படுத்துதல், முயற்சியாளர் வளங்கள் திட்ட முறைமையொன்றை ஏற்படுத்துதல் விற்பனை நிலையங்களை கணனிமயப்படுத்துதல், மனித வள தகவல்கள் முறைமையொன்றை செயற்படுத்துதல் மற்றும் மன்னாரில் விற்பனை நிலையமொன்றை நிர்மாணித்தல் போன்ற மூலதன செயற்பாட்டிற்காக ரூபா 850 மில்லியனான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா ரூபா 424.1 மில்லியன் அதாவது 49.8% புதிய விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. 150 புதிய வீடுகளை ஆரம்பிப்பதற்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 67 விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

(ஆ) புதிய விற்பனை நிலையங்களை திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் விற்பனை மற்றும் இலாபத்தன்மையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை 20.8 சதவீதத்தனால் அதிகரிக்கையில் விற்பனை வருமானம் 10.7 அதிகரித்தனால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 பிரிவிற்கு முரணாக அமைச்சரவை அங்கீகாரமின்றி கம்பனியின் பதவியணியின் 17 பேர் 2017 சனவரி முதல் யூலை வரை வரையில் வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,594,340 கம்பனியால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், இச் செலவினத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனை நிலையங்களில் இருப்பு தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற பலவீனம் காரணமாக இருப்பு நட்டத்தை சரியாக கணிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கம்பனியின் 10 விற்பனை நிலையங்களில் களவு போனமை தொடர்பாக காப்புறுதி இழப்பீட்டினை பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்காக இனங்காணப்பட்டிருந்த நட்டம் ரூபா 4,625,526 ஆக இருந்த போதிலும் அதற்குரியதாக கிடைக்க கூடியதாக இருந்த காப்புறுதி இழப்பீட்டுத்தொகை ரூபா 1,026,666 மாத்திரமாக இருந்தது. இவ்வாறே குறித்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருணாகல் மல்லவபிட்டிய லங்கா சதொச விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காக 03 வருட குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் குறித்த உடன்படிக்கையை முடிவுறுத்துவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையை முடிவுறுத்தாமல் 2016 நவம்பர் முதல் 2017 திசெம்பர் வரை மாதாந்தம் ரூபா 100,000 வீதம் 14 மாதங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த வாடகை தொகை ரூபா 1,400,000 ஆக இருந்தது.

## 3.4 பதவியணியினர் நிர்வாகம்

கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 4,186 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் உள்ளவாறான பதவியணியினர் 3,784 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கம்பனியின் விற்பனை நிலையங்கள் அதிகரித்ததன் பின்னர் அதனுடன் இணைந்ததாக மீளாய்வாண்டின் போது பதவியணயினர் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படாததன் காரணமாக 1,024 பதவியணியினர் பற்றாக்குறையாகவும் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தமையால் 622 மிகைகளும் காணப்பட்டன.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ நிபுணர்களாக வரிசை அமைச்சிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்கள் வெவ்வேறு பணிப்பொறுப்புகளுக்காக கம்பனிக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அந்த

உத்தியோகத்தர்களின் படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 930,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துதுல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியொன்றின் இயக்குனர் சபையினால் ஒவ்வொரு ஆண்டிலும் பொதுசபை கூட்டமொன்று கூட்டப்பட வேண்டிய போதிலும் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு முதல் கணக்காயர்வு திகதியான 2018 செப்தம்பர் 30 வரையான காலப்பகுதியில் ஒரு பொதுச் சபைக் கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

### 4.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள்

கம்பனிக்குரிய 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 4.3 பந்தியில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பின்வரும் குறைபாடுகள் தொடர்பாக கம்பனியால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 பந்தின் பிரகாரம் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு அமைய அமைப்பு வரைபடமொன்றும் 9.3 பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றும் அங்கீகரித்துக்கொள்ளாமை மற்றும் முறையற்ற ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வும் வழங்கல்.

### 4.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

#### 4.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் அதன் விற்பனை நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக நாடு முழுவதும் வெவ்வேறு பிரதேசங்களில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடங்கள், பெறுகை செயற்பாடுகளுக்கு புறம்பாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 476,497,648 ஆக இருந்தது.

(ஆ) வாடகை வாகனங்கள் வழங்குவதற்காக பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி தெரிவுசெய்யப்பட்டிருந்த வாடகை வாகனங்களை வழங்கும் நிறுவனமொன்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,562,730 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பெறுகை நடவடிக்கை கட்டுப்பாடு | பெறுகை நடவடிக்கைகளின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மனித வள | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று |

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவம் | காணப்படாமை முறையற்ற ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு வழங்கல் |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | வருடாந்த பாதீடு தயாரிக்காமையால் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த முடியாமை. |
| (ஈ) | பொருளிருப்பு கட்டுப்பாடு | சரியான இருப்பு அறிக்கைகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |